Kerala Board



Question Paper

2024

aglasem.com

FY-420

Reg. No. : .....

Name : .....

FIRST YEAR HIGHER SECONDARY EXAMINATION, MARCH – 2024

Part – III

TAMIL (Optional)

Maximum : 80 Scores

Time : 2½ Hours

Cool-off time : 15 Minutes

General Instructions to Candidates :

- There is a 'Cool-off time' of 15 minutes in addition to the writing time.
- Use the 'Cool-off time' to get familiar with questions and to plan your answers.
- Read questions carefully before answering.
- Read the instructions carefully.

1 முதல் 10 வரையுள்ள வினாக்களுக்கு எவையேனும் எட்டனுக்குச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுங்கள். மதிப்பெண் ஒன்று வீதம்

(8 × 1 = 8 மதிப்பெண்கள்)

1. 'ஆலாபனை' என்ற கவிதை தொகுதியின் ஆசிரியர்?

   (அ) சிற்பி (ஆ) வைரமுத்து

   (இ) மு. மேத்தா (ஈ) அப்துல் ரகுமான்

2. ஐந்து அடகளால் ஆன ஹைக்கூ கவிதை வடிவம்?

   (அ) தான்கா (ஆ) கட்டவ்டா

   (இ) சோகா (ஈ) செடோகா

3. தங்கமீன்கள் திரைப்படத்தின் இயக்குனர்?

   (அ) மணிரத்னம் (ஆ) சங்கர்

   (இ) ராம் (ஈ) பாரதிராஜா

4. Internet என்ற ஆங்கிலச் சொல்லிற்கு இணையானத் தமிழ்ச் சொல்?

(அ) வலைப்பூ (ஆ) கடவுச்சொல்

(இ) இணையம் (ஈ) கோப்பு

5. பிரபந்தங்கள் எத்தனை வகை?

(அ) 96 (ஆ) 67

(இ) 97 (ஈ) 94

6. வாழ்வியலின் இலக்கணத்தைக் கூறும் நூல்?

(அ) சிலப்பதிகாரம் (ஆ) தொல்காப்பியம்

(இ) அகநானூறு (ஈ) பெரியபுராணம்

7. 'ஏழையின் சிரிப்பில் இறைவனைக் காண்கிறோம்' என்று கூறியவர்?

(அ) அப்துல் ரகுமான் (ஆ) அறிஞர் அண்ணா

(இ) மு. மேத்தா (ஈ) சிற்பி

8. 'Folklore' என்ற சொல்லை உருவாக்கியவர்?

(அ) கெவின்மூர் (ஆ) ரிச்சர்ட்ஸ்

(இ) பீட்டர் (ஈ) வில்லியம் ஜான் தாமஸ்

9. "செம்புலப் பெயல் நீர் போல

அன்புடை நெஞ்சம் தாம் கலந்தனே"

– இத்தொடர் இடம்பெறும் நூல்?

(அ) குறுந்தொகை (ஆ) புறநானூறு

(இ) அகநானூறு (ஈ) ஐங்குறுநூறு

10. மதுரைக் காஞ்சி நூலின் ஆசிரியர்?

(அ) நக்கீரர் (ஆ) மாங்குடி மருதனார்

(இ) நல்லாதனார் (ஈ) காரியாசான்

11 முதல் 18 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஆறனுக்கு விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் 2 வீதம். (6 × 2 = 12 மதிப்பெண்கள்)

11. புதுக்கவிதையின் இயல்புகள் இரண்டினை எழுதுங்கள்.

12. குறியீட்டியல் – சிறுகுறிப்பு எழுதுங்கள்.

13. தங்கமீன்கள் திரைப்படத்தில் இடம்பெறும் இரண்டு கதாப்பாத்திரங்களின் பெயர்களை எழுதுங்கள்.

14. கீழ்த் தரப்பட்டுள்ளவற்றுள் அடுக்குத் தொடரைத் தேர்வு செய்து எழுதுங்கள்.

- தீ தீ
- பள பள
- கட கட
- வருக வருக

15. தனி வாக்கியம் – எடுத்துக் காட்டுடன் விளக்கி எழுதுங்கள்.

16. கீழ்த் தரப்பட்டுள்ளவற்றுள் பாரதிதாசன் எழுதிய நூல்களைத் தேர்வு செய்து எழுதுங்கள்.

குடும்ப விளக்கு , பாஞ்சாலி சபதம்

கண்ணன் பாட்டு , அழகின் சிரிப்பு

17. பின் வரும் சொற்களை அகர வரிசைப்படுத்தி எழுதுங்கள்?

உழவு, களை, அறுவடை, பஞ்சம்

18. இனியவை நாற்பது – குறிப்பு எழுதுங்கள்?

19 முதல் 24 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் ஐந்தனுக்கு அரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் நான்கு வீதம்.

(5 × 4 = 20 மதிப்பெண்கள்)

19. "என்னுடையது என்று நீ உரிமை

கொண்டாடும் எதுவும் உன்னுதடையதல்ல"

– அப்துல் ரகுமான்

– இப்பாடல் வரிகளுக்கு விமர்சனக் குறிப்பு எழுதுங்கள்?

20. பச்சை வயல் நாடகத்தில் இடம்பெறும் தர்மு என்ற கதாப்பாத்திரத்தைத் திறனாய்வு செய்து எழுதுங்கள்?

21. (அ) பருவத்தே பயிர் செய்.

(ஆ) நிறைகுடம் தளும்பாது.

– இப்பழமொழிகளை விளக்கி எழுதுங்கள்.

22. போரினால் ஏற்படும் இழப்புகளை எடுத்துக் கூறி, மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் துண்டு பிரசுரம் தயார் செய்யுங்கள்.

23. பொருத்துக :

(அ) திருக்குறள் – முன்றுறையரையனார்

(ஆ) நாலடியார் – கணிமேதாவியார்

(இ) ஏலாதி – சமண முனிவர்

(ஈ) பழமொழி – திருவள்ளுவர்

24. கீழ்த் தரப்பட்டுள்ள குறள்களின் பொருளை எழுதுங்கள்

(அ) ஒழுக்கத்தின் எய்துவர் மேன்மை இழுக்கத்தின்

எய்தும் எய்தாப் பழி

(ஆ) தொட்டனைத் தூறும் மணற்கேணி மாந்தர்க்குக்

கற்றனைத் தூறும் அறிவு.

25 முதல் **29** வரையுள்ள வினாக்களுள் எவையேனும் நான்கனுக்கு ஒன்றரைப் பக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் ஆறு வீதம் **(4 × 6 = 24 மதிப்பெண்கள்)**

25. உங்கள் பள்ளியில் அறிவியல் தினத்தையொட்டி நடைபெறும் கருத்தரங்கைத் தொடங்கி வைக்க அறிவியல் அறிஞர் நெல்லை சு. முத்து அவர்கள் வருகை தரவுள்ளார். அவரைப் பேட்டிக் காண ஐந்து வினாக்கள் கொண்ட வினாநிரல் தயார் செய்யுங்கள்.

26. இணையத்தைத் தவறாகப் பயன்படுத்துவதால் ஏற்படும் விளைவுகளைக் குறிப்பிட்டுப் பத்திரிகைக்கு அனுப்பத் தலையங்கம் தயார் செய்யுங்கள்.

27. "தமிழுண்டு தமிழ்மக்களுண்டு – இன்பத்

தமிழுக்கு நாளும்செய்வோம்நல்ல தொண்டு

தமிழ் என்று தோள்தட்டி ஆடு – நல்ல

தமிழ் வெல்க வெல்க என்றே தினம்பாடு"!

- பாரதிதாசன்

– இப்பாடல் வரிகளை நயம்பாராட்டி எழுதுங்கள்.

28. உங்கள் பள்ளியில் பொங்கல் தினத்தில் நடைபெறும் பேச்சுப் போட்டியில் பங்குபெற, 'நாட்டுப்புறப் பாடல்களின் சிறப்பு' என்ற தலைப்பில் உரை தயார் செய்யுங்கள்.

29. உலக அமைதியைக் காப்பதன் முக்கியத்துவத்தை வலியூட்ட வானொலி உரை தயார் செய்யுங்கள்.

30 முதல் 32 வரையுள்ள வினாக்களுள் எவையேனும் இரண்டனுக்கு இருபக்கத்திற்கு மிகாமல் விடை எழுதுங்கள். மதிப்பெண்கள் எட்டு வீதம்

(2 × 8 = 16 மதிப்பெண்கள்)

30. உங்கள் பள்ளியில் சுற்றுச் சூழல் தினத்தில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் வாசிக்க 'இயற்கையோடு இயைந்த வாழ்வே நலமான வாழ்வு' என்ற தலைப்பில் கருத்தரங்கக் கட்டுரை எழுதுங்கள்.

குறிப்புகள்:

– மனித வாழ்க்கை இயற்கையோடு இயைந்தது

– இயற்கையின்றி மனித வாழ்க்கை இல்லை

– இயற்கை பாதுகாப்பு

31. உங்கள் பள்ளியில் திருவள்ளுவர் தினத்தில் வெளியிடவிருக்கும் சிறப்பு இதழில் 'தமிழ் மொழியின் தொன்மையும் சிறப்புகளும்' என்ற தலைப்பில் சிறப்புக் கட்டுரை எழுதுங்கள்.

குறிப்புகள்:

– தமிழ் மொழியின் தொன்மை

– பிறமொழித் தாக்கமின்மை

– இலக்கியவளம், இலக்கணச் சிறப்பு நிறைந்தது.

– தமிழ் மொழியின் தனித்தன்மை

32. உலக நாட்டுப்புறவியல் தினத்தையொட்டி உங்கள் பள்ளியில் வெளி வரும் இதழில் 'தோல்பாவைக் கூத்து' என்ற தலைப்பில் கட்டுரை எழுதுங்கள்.

குறிப்புகள்:

– கூத்து நடைபெறும் சூழல்

– தேர்வு செய்யும் கதைக் கரு

– கூத்து நடைபெறும் இடம்

– தோல்பாவைக் கூத்து அமைக்கப்படும் முறை

– ஒப்பனை

QUESTION PAPERS

GET PREVIOUS YEAR QUESTION PAPERS FOR ALL CLASSES FOR CBSE, ISCSE, ISC AND ALL ALL STATE BOARDS HERE AT AGLASEM.COM

BOARD WISE

- Andhra Pradesh Board Question Papers
- Assam Board Question Papers
- Bihar Board Question Papers
- Chhattisgarh Board Question Papers
- Goa Board Question Papers
- Gujarat Board Question Papers
- Haryana Board Question Papers
- Himachal Pradesh Board Question Papers
- J&K State Board Question Papers
- Jharkhand Board Question Papers
- Karnataka Board Question Papers
- Kerala Board Question Papers
- Madhya Pradesh Board Question Papers
- Maharashtra State Board Question Papers
- Manipur Board Question Papers
- Meghalaya Board Question Papers
- Mizoram Board Question Papers
- Nagaland Board Question Papers
- Orissa Board Question Papers
- Punjab Board Question Papers
- Rajasthan Board Question Papers
- Tamil Nadu Board Question Papers
- Telangana State Board Question Papers
- Tripura Board Question Papers
- Uttarakhand Board Question Papers
- Uttar Pradesh (UP) Board Question Papers
- West Bengal (WB) Board Question Papers